# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 195/மா/2022**

**நாள்: 07.12.2022**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 05,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 25.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2022–ல் பெறப்பட்டு 195/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 25.10.2022 நாளிட்ட தனது மனுவில் :

“பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு எண்.105, மண்டலம் 7 கதவு எண்.7A வேனல்ஸ் ரோடு எக்மோர் சென்னை -8ல் இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி ஹோட்டல் தங்கும் விடுதி (Lodge) சர்வே எண்.47/1, மொத்தப் பரப்பளவு 5785 மற்றும் R.S.எண்.47/6 – 276 சதுரடி இக்கட்டிடம் தரைத்தளம் 1 மற்றும் மூன்று மாடிகளை கொண்ட தங்கும் விடுதி ஆகும். இக்கட்டிடத்திற்கு அளவீடை குறைத்து சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த லாட்ஜில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் வரி முறையாக செலுத்தவில்லை. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டு வருகிறது. ஆகவே முறையான அளவீடு செய்து வரிவிதிக்கவும், ஹோட்டல் ஸ்ரீராம் நல்லமணி தங்கும் விடுதியானது (Lodge) பொதுமக்கள் பயன்படுத்தக் கூடிய கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது

கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் **1965** பிரிவு **2 (8)**ன்படி (Section 2 (8) of the Tamil Nadu Public Building (Lincensings) 1965)-ன் படி முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது புதுப்பிப்பது அவசியமாகும் என்றும் ஆனால் உரிமம் ஏதும் பெறவில்லை எனவும், இக்கட்டிடம் பொது மக்கள் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால் வருவாய் துறையினர் இடம் முறையாக அனுமதி பெறவில்லை எனவும், இக்கட்டிடம் பொது மக்கள் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால், வருவாய் துறையினரிடம் முறையான அனுமதி பெறவில்லை எனவும் ஸ்ரீராம் நல்லமணி ஹோட்டல் பொது மக்கள் பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் **1973**-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டப்பிரிவு **33**-ன்படி கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத் திட்ட இயக்கத்தில் (Directorate of town and country planning) ஒப்புதல் ஏதும் பெறவில்லை என்றும், எனவே சட்டத்திற்கு புறம்பாக இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி ஹோட்டல் தங்கும் விடுதியை (Lodge) தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் **1971**-ன் பிரிவுகள் **56** மற்றும் **57**ன் கீழ் பூட்டுதல் மற்றும் முத்திரையிடுதல் (Lock and Seal) மற்றும் அமலாக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 22.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 7.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் **22.11.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, எழும்பூர், வேனல்ஸ் ரோடு, கதவு எண். 7A என்கின்ற இடத்தில் ஸ்ரீராம் நல்லமணி ஒட்டல் மற்றும் தங்கும் விடுதி இயங்கிவருகிறது. தரைதளம் மற்றும் 3 மாடிகளைக் கொண்ட மேற்கண்ட ஒட்டல் மற்றும் தங்கும் விடுதிக்கு குறைந்த அளவே சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. மேற்கண்ட தங்கும் விடுதியில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில்வரி முறையாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட வில்லை. அதே போன்று மேற்கண்ட ஒட்டலுக்கு முறையான கட்டட அனுமதி பெறப்படவில்லை. மேலும் மேற்கண்ட ஒட்டல் பொதுக் கட்டடம் என்பதால், தமிழ்நாடு கட்டடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2 (8)ன் படி உரிமம் பெறவில்லை.

எனவே, முறையாக சொத்து வரி, தொழில் வரி மற்றும் முறையான உரிமம் பெறாத மேற்கண்ட ஒட்டல் மற்றும் தங்கும் விடுதியின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட (Lock and Seal) ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி வருவாய் அலுவலர் 22.11.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஸ்ரீராம் நல்லமணி ஒட்டல் மற்றும் தங்கும் விடுதிக்கான சொத்து வரி கட்டடத்தின் பரப்பளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு ஓர் அரையாண்டிற்கான சொத்து வரியாக ரூ.2,72,280/– என நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட ஒட்டல் மற்றும் தங்கும் விடுதியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தின் அடிப்படையில் தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக என்னால் இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனது 21.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள

விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் 7.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அவர் தனது 21.11.2022 நாளிட்ட அறிக்கையில் :**

இம்மனு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

" பெருநகர சென்னை மாநகராட்சியினை பொருத்தவரை சொத்துவரி மதிப்பீடானது குடியிருப்பு பகுதி, குடியிருப்பு அல்லாத பகுதி மற்றும் சிறப்பு வகை கட்டிடங்கள் என கட்டிடத்தின் பயன்பாட்டின் அடிப்படையில் சொத்துவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. கதவு எண்.7ஏ, வேனல்ஸ் சாலை, எழும்பூர், சென்னை-8 என்ற முகவரியில் இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி ஹோட்டல் தங்கும் விடுதியாக நாள் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருவதால் இக்கட்டிடத்திற்கு அறையின் வாடகை அடிப்படையில் சிறப்பு வகை கட்டிடங்களுக்கான கணக்கீட்டின் அடிப்படையில் சொத்துவரி மதிப்பீடு செய்யப்பட்டு ஓர் அரையாண்டிற்கான சொத்து வரியாக ரூ.2,27,280/- என நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை நிலை எண்.53, ந.நி. (ம) கு.வ. துறை நாள்:31/03/2022/ன்படியும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மன்ற தீர்மான எண்.63, நாள்:31.05.2022படியும் சிறப்பு வகை கட்டிடங்கள் அனைத்தும் குடியிருப்பு அல்லாத வகைப்பாட்டில் வரி மதிப்பீடு செய்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டு 01.04.2022 முதல் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அதனடிப்படையில், கடந்த 31.03.2022 வரையில் சிறப்பு வகை கட்டிடத்தின் சொத்துவரி நிலுவையினை வசூலித்தப் பின்னரே மேற்கண்ட அரசாணையினை நடைமுறைப்படுத்த இயலும் என்பதால், 31.03.2022 (2/2021-2022) வரையிலான நிலுவைத் தொகையான ரூ.815/- உடன் கூடுதலாக ரூ.185/-ம் சேர்த்து ரூ.1,000/-ஐ 16.11.2022 அன்று வசூலிக்கப்பட்டு விட்டதன் காரணமாக, மேற்கண்ட அரசாணையின்படி கள ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி குடியிருப்பு அல்லாத பகுதியாக சொத்துவரி மதிப்பீடு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட சொத்துவரி மதிப்பீடு ஆணை விரைவில் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள சொத்துவரியின் நிலுவைத் தொகையினை வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அந்நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தின் அடிப்படையில், தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 137–Bன்படி 12 அரையாண்டுகளுக்கான நிலுவைத் தொகை மற்றும் தண்டத் தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்பட்டுள்ளது என தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதிகளுக்கான உரிமம் (Lodging Licence) என்பது பெருநகர சென்னை மாநகராட்சியினை பொருத்தவரை சம்மந்தப்பட்ட மண்டல சுகாதார அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கான உரிய சான்று வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் புதுப்பிக்கும் பணி சுகாதார துறையின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது".

2) பெருநகர சென்னை மாநகராட்சியினை பொருத்தவரை பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919ன்படியே கட்டிடங்களுக்கான

அனுமதி வழங்கும் நிகழ்வுகள் சம்மந்தப்பட்ட மண்டல பொறியியல் துறையின் மூலமே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, பத்தி எண்.2ன் வரிசை எண்.1 மற்றும் 2 வருவாய் துறையினை சார்ந்தது இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**இம்மனு தொடர்பாக எதிர்மனுதாரரை 24.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 22.11.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –05ன் உதவி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் 24.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலங்களை சமர்ப்பித்தனர்:

" பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5 எக்மோர், வேனல்ஸ் ரோடு, கதவு எண்.7A என்கின்ற முகவரியில் ஸ்ரீராம் நல்லமணி ஹோட்டல்-தங்கும் விடுதி இயங்கி வருகிறது. மேற்கண்ட தங்கும் விடுதிக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் (CMDA) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தங்கும் விடுதி சுமார் 20 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. மேற்கண்ட தங்கும் விடுதிக்கு தரைதளம் + 3 மாடிக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அனுமதி வழங்கியுள்ள நிலையில், அங்கு தரைதளம் + 5 மாடிக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அனுமதிக்கு மாறாக மேலும் 2 மாடிக் கட்டடம் அங்கு கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட தங்கும் விடுதிக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட கட்டடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுக்க இயலாது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இது தொடர்பான ஆணை/வழிகாட்டியின் (guidelines) நகல்களை இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் என தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கான சொத்து வரி மற்றும் மேற்கண்ட தங்கும் விடுதியில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரி ஆகியவை பெருநகர செ.னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ன் உதவி ஆணையர் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் வெளியிடப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப்பகிர்வு அளிக்கும் ஆணையின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரின் மனு, மண்டலம்–5ன் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் மண்டலம்–5ன் உதவி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை, புது விளாங்குடியைச் சேர்ந்த திரு R. மயில்சாமி தன்னுடைய மனுவில், சென்னை–8 எழும்பூர், வேனல்ஸ் சாலையில் இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி தங்கும் விடுதி குறித்து புகார் மனு அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5, எழும்பூர் வேனல்ஸ் சாலையில் இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி தங்கும் விடுதி 20 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என்றும், அந்த தங்கும் விடுதியின் கட்டடத்தின் பரப்பளவு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு ஓர் அரையாண்டிற்கான சொத்துவரியாக ரூ.2,72,280/– என நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்படுவதும், அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தின் அடிப்படையில் தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதும் அறிய முடிகிறது. இந்த தங்கும் விடுதிக்கு சென்னை பெருநகர் குழுமத்தால் அளிக்கப்பட்ட

அனுமதிக்கு மாறாக, அங்கு தரைதளம் + 5 மாடிக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்றும் அறிய முடிகிறது.

மண்டலம்–5ன் உதவி ஆணையர் மேற்கண்ட தங்கும் விடுதிக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட கட்டடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்க இயலாது என்று தெரிவித்த நிலையில், சென்னை வளர்ச்சிக்குழுமத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆணை எண். RT/19948/2011 நாள் 02.12.2016ல் 6 பத்தி v, vi மற்றும் vii பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

" v) Even in respect of CMDA issued planning permission cases, the Greater Chennai Corporation/Local Bodies concerned shall inform CMDA, if any deviation/violation in those buildings as the Greater Chennai Corporation/Local Bodies possess field level staff, so that the deviation/violations can be contained at the beginning stage itself by CMDA.

vi) Chennai Metropolitan Development Authority shall take enforcement action under section 56 & 57 of T&CP Act, 1971 on those cases for which CMDA has issued planning permissions.

vii) The local bodies in CMA shall not desist taking enforcement action by taking a stand that the deviations / unauthorized constructions has transformed the building into a building which comes under the view of CMDA and shift the responsibility to CMDA."

மேலே கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில், இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

சென்னை, எழும்பூர், வேனல்ஸ் சாலையில் கதவு எண். 7A–ல் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் ஸ்ரீராம் நல்லமணி தங்கும் விடுதிக்கு சென்னை வளர்ச்சிக்குழுமத்தால் அனுமதி அளித்து இருந்தாலும், அக்குழுமம் 02.12.2016 நாளிட்டு வெளியிடப்பட்ட ஆணையில், வரிசை எண்.v, vi மற்றும் vii-ன்படி, ஸ்ரீராம் நல்லமணி தங்கும் விடுதி அனுமதிக்கு மாறாக 5 மாடி கட்டடம் கட்டியதை ஆரம்ப நிலையிலேயே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் அலுவலர்களால், சென்னை வளர்ச்சிக்குழுமத்திற்கு முறையாக தெரிவிக்கவில்லை என்பது புலனாகிறது. அவ்வாறு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ன் அலுவலர்கள் ஆரம்பநிலையிலேயே அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடம் குறித்து சென்னை வளர்ச்சி குழுமத்திற்கு தெரிவித்து இருந்தால், Town & Country Planning Act, 1971–ன் பிரிவு 56 மற்றும் 57ன்படி அக்குழுமத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும். மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ன் உதவி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்த **"குறிப்பிடப்பட்டுள்ள தங்கும் விடுதிக்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்டடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுக்க இயலாது என்ற கூற்று"** மேற்கண்ட ஆணையின்படி, உண்மைக்கு மாறாக உள்ளது என இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், தங்களுடைய பணியினை சரிவர செய்யாமலும், அந்த தவற்றினை வேறு அலுவலர்களை மற்றும் வேறு துறைகளை பொறுப்பாக்குவது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. எனவே தக்க நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ன் முன்னாள் மற்றும் தற்போதைய சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்களை பொறுப்பாக்கி, அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

From the statement of the Zonal Officer, it is seen that the Zone has not taken any action in the matter by smartly passing the buck to the CMDA. The circular of the CMDA in 2016 states that any deviation or violation in the construction wherein the CMDA had given approval should be brought to its notice then and there so that it would take appropriate suitable action at the initial stage itself. Now that has been crossed. The present set of officials right from the Assistant Commissioner have not

done anything in the matter. In the CMDA circular Para No vii clearly states that the local bodies in CMA shall not desist taking enforcement action by taking a stand that the deviations / unauthorized constructions has transformed the building into a building which comes under the view of CMDA and shift the responsibility to CMDA."

The Greater Chennai Corporation Commissioner is directed to pull up the lethargic Zonal machinery of the Zone 5 and instruct to measure the construction with reference to the plan approval by CMDA specify the violations and take necessary action against the building management without evading its responsibility indicative of its indirect collusion and complicity abetting such violations in a vital area of the Metropolitan City. Disciplinary action against the field officers should be taken simultaneously. This kind of evasiveness, dereliction of duties, indirect connivance at such illegalities is censured by this Forum. It betrays a sad lack of leadership ethics and efficacy at the Zonal level. The whole exercise of identification of violations and initiation of punitive action should be completed within 45 days and an action taken report to be sent to this Forum.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (works)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*
ரிப்பன் மாளிகை வளாகம், சென்னை- 600 003.
4. மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி,
61, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
5. துணை ஆணையர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி,
61, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
*He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

__நகல் :__

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளருக்காக.